# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7925/விசாரணை/E/2023**

திருமதி.மீனாட்சி முருகரத்தனம் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை மேற்கு, மதுரை மாவட்டம்-641 062. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 07.10.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மதுரை மேற்கு வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் 03.03.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 26.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக உரிய ஆவண நகல்களை இணைத்து 27.02.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ததன் அடிப்படையில், இவ்வாணையத்தால் 20.03.2026 அன்று கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :-

1. *மேல்முறையீட்டாளருக்கு தற்போது 26.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதால், தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. *மேல்முறையீட்டாளரின் 06.12.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு, தற்போது 26.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 3 ஆண்டுகளுக்கு பின்பாக தற்போதுதான் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதால், மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்காக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பான மதுரை மேற்கு வட்டாட்சியர் அலுவலகம் வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த அறிக்கையை 07.04.2026 அன்று ஆணையத்தில் பொதுத் தகவல் அலுவலர் மூலம் தவறாமல் நேரில் சமர்ப்பிக்குமாறு மதுரை மேற்கு வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. மேற்குறித்த உத்தரவின் அடிப்படையில், மதுரை மேற்கு வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.புவனேஸ்வரி 06.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 02.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக நஷ்டஈட்டுத் தொகையான ரூ.5,000/-க்கான வங்கிவரைவோலையை இணைத்து பதிவஞ்சலில் 02.05.2026 அன்று அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்து, மேற்குறித்த கடிதத்தின் நகல் மற்றும் பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ததன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 07.05.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7925/விசாரணை/E/2023</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை மேற்கு, மதுரை மாவட்டம்-641 062.

திருமதி.மீனாட்சி முருகரத்தனம்
122 எலிசியம் பிளஷிங் மேடொவ்ஸ்,
குளோபஸ் கார்டன்ஸ்,
கே.கே.பாளையம், மைலம்பட்டி,
கோயம்புத்தூர்-641 062.

Copy to: File
RJ/PS 8.5